# ஸாளக்ராமலக்ஷணாநி

ஸ்ரீ.உ.வே. N.A.வரதராஜபட்டாச்சார், திருவான்மியூர்
***சின்னமுறை பரம்பரை அர்ச்சகம் மிராஸ்தார்,***
***ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமிதேவஸ்தானம் திருவல்லிக்கேணி***

விதேஹ ராஜ்யத்தில் தாஸி குலத்தில் பிறந்த ப்ரியம்வதா என்னும் மாது அழகிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவளாக இருந் தாள். அழகிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்தவனாக எவனொருவன் தன்னை வந்தடைகிறானோ அவனையே கணவராக வரித்து தன் வாழ்நாட்களை அவனுக்கே அர்ப்ப ணிப் பேன் என்பதாக விரதமெடுத்து ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து தவம் இயற்றினாள். ஸ்ரீஹரியும் அவளது பக்திக்கு மனமிரங்கி மானிட உருவில் அவளை மணந்தார். பகவானிடத்தில் கொண்ட பக்தி விசேஷத்தால், பரந்தாமனின் உண்மை ஸ்வரூப மறிந்து வணங்கி பலவாறாகத் துதித்து “பிரபோ! மூக்குணங்களுக்கும் அப்பாற் பட்ட சிறந்த குணமுடைய மகனாக தாங்களே பிறந்து என்னை உஜ்ஜீவிக்க வேண்டும் என்ற வரம் யாசித்தாள். பக்தவத்ஸலரான பகவானும் மனமுவந்து “ப்ரியம்வதையே நீ மறுபிறப்பில் கண்டகி என்னும் நதியாக ஆவாய் நான் அதன் மத்தியில் சாளக்கிராம உருவில் உனக்கு பிள்ளையாக ஆவிர் பவிப்பேன்” என்றும் வரமருளினார். அதன்படியே ப்ரியம்வதை கண்டகி என்னும் நதியாகவும்

அதில் பகவத்ஸ்வரூபமான அநேகவித சாளக்கிராமங் களாகும் உண்டாயின. வாசுதேவம், ஹிரன்யகர்ப்பம், பிரத்யும்னம், அநிருத்தம், வாமநம், ததிவாமநம், த்ரிவிக்ரமம், ஸ்ரீநர ஸிம்ஹம், ஸ்ரீராமம், லக்ஷ்மீ நாராயணம், மத்ஸ்யம், கூர்மம், வராஹம், ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மம், பரசுராமம், பலராமம், கோபாலம், வேணுகோபாலம், ஸந்தான கோபாலம் என இன்னம் அனேக வித விசேஷமான பகவத் ஸ்வரூபமான ஸாளக்ராமங்கள் விளங்குகின்றன. ஸாளக்ராம லக்ஷணங்களாவன:

1. ஹிரண்யகர்பம்: ஶ்வேதவர்ணம் (வெளுப்பு) ஞானத்தையும், வாஸுதேவம் - மஹா ஶ்வேதம் (மிக வெளுப்பு) மோக்ஷத்தையும் - பிரத்யும்னம் - ரக்தவர்ணம் (சிவப்பு) ராஜ்யத்தையும் - அநிருத்தம் - அதிரக்தம் (மிக சிவப்பு) சக்ரவர்த்தி பதவி யையும் - வைஷ்ணவம் - நீலவர்ணம் ஸம்பத்தையும் வாமனம் - மஹாநீலம் (பச்சை), இந்திர ஸம்பத் தையும் - நரசிம்மம் - காபிலம் (மஞ்சளும், சிவப்பும் கலந்தது). வைராக்யத்தையும் ஸ்ரீராமம் - ஶ்யாம வர்ணம் (கருப்பு) ஶரீர புஷ்டி யையும், லக்ஷ்மீ நாராயணம் - பீதவர்ணம் (மஞ்சள்) தங்கத்தையும் அநந்தம் - பஹுவர்ணம் (சகல வர்ணம் கலந்தது). நினைத்த வஸ்துக்களையும் அளிக்க வல்லது.

ஸ்ரீமத்ஸ்யமூர்த்தம்: ஸ்ரீவத்ஸம் என்ற புள்ளி (அடையா ளம்)அனேக பொட்டு வரிசைகள் நீண்ட வருவத்துடனும் தலை யிலும், வாலிலும் சக்கரங்கள் உடையது. ஒரு சக்கரத்தோடும், கருப்பு நிறத்தோடும் இருக்கும்.

ஸ்ரீகூர்ம மூர்த்தம்: உருண்டையாய் பிளந்த சக்கரங்கள் நிறைந்து ஸூக்ஷ்மமான முகத்தோடு தங்கப் பொருட்களோடு, பூவரைகளால் நிறைந்து கறுத்திருக்கும்.

ஸ்ரீவராஹ மூர்த்தம்: நீண்ட முகத்துடன் பூ மண்டலங்கள் சூழ்ந்து 2 சக்ரங் களுடன் கூடி கறுத்திருக்கும்.

ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ மூர்த்தம்: கருமை நிறத்துடன் இடது பக்கத்தில் சக்ரத்துடனும் பொட்டுகளுடனும் கூடியது. பூஜைக்கு சிறந்தது. எல்லா குடும்பஸ்தர்களும் பூஜிக்கலாம். புக்தி முக்திகளை அளிக்க வல்லது.

ஸ்ரீநரஸிம்ஹ மூர்த்தம்: நீண்ட முகம், பெரிய வயிறு, பெரிய சக்கரம், கோரைப் பற்களோடும் தேன்நிறமுள்ளது. பிரம்மசாரிகளும், ஸந்யாஸிகளுமே பூஜிக்கலாம் என சான்றோர் வாக்கு.

வாமன மூர்த்தம்: உருண்டை வடிவம். இந்த்ர நீலவர்ணம். பொட்டு வரிசைகளுடனும் சக்கரத்துடனும் கூடியது.

ததிவாமனம்: மேற்கண்ட லக்ஷணங்களுடனும் சக்ரத்தின் மேலும் கீழும் ஒளிர்கின்ற தயிர் பொட்டுகளுடன் கூடியது.

பரசுராம மூர்த்தம்: அருகம்புல் போன்று கரு நிறத்துடனும், தோள்புறம் கோடரி அடையாளமும் சக்கரத்துடனும் கூடியது.

ஸ்ரீராமசந்த்ரமூர்த்தம்: பருத்த நீண்ட உருவத்தோடும் வில், அம்பு அடையாளமும் சக்கரத்தோடும் அனேக துவாரங்களுடனும் கருமை நிறமும் உடையது.

ஸ்ரீபலராமமூர்த்தம்: வெளுத்ததாய் கலப்பை, உலக்கை சின் னம், வனமாலை, தேன் பொட்டுகளுடன் அழகாக விளங்கும்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தம்: பஞ்சாயுதங்களின் ரேகைகள், வன மாலை இவற்றுடன் சிறியதாக கருமை நிறத்துடன் தாமரை பூ கோடுகளுடன் கூடியது.

ஸ்ரீகோபாலமூர்த்தம்: முன்சொன்ன லக்ஷணங்களுடன் கரு நிறத்தோடு மழமழப்பாக விசாலமான வயிற்றையும் உடையது. புக்தி முக்திகளை அளிக்கவல்லது.

ஸ்ரீகோபால மூர்த்தம்: முன்சொன்ன லக்ஷணங்களுடன் துவாரமுள்ள புல்லாங்குழல் சின்னத்துடன் கறுத்திருக்கும்.

ஸ்ரீஸந்தான கோபால மூர்த்தம்: மேற்சொன்ன லக்ஷணங் களுட னும், சிகப்பு கோடுகளும் கருமை நிறமும் கொண்டது. புத்ர சம்பத்தை விசேஷமாக அளிக்கும் அரிதான இந்த மூர்த்தம், மனோபீஷ்டங்களை வெகு சீக்கிரத்தில் பூர்த்தி செய்யவல்லது.

ததிகோபால மூர்த்தம்: எனப்படுவது பசுபுத்திராதிகளை அபிவிருத்தி செய்யும் சக்தியுடையது.

கல்கி மூர்த்தம்: இந்திரநீல ரத்ன சோபையுடன் நீண்டு வனமாலையால் அலங்கரிக்கப்பட்ட அடையாளத்துடன் முன்பக்கம் பருத்து மாவட்டியை அடையாளமாக உள்ளது.

ஹயக்ரீவ மூர்த்தம்: பழுத்த நாவல் பழ நிறத்துடன் மாவட்டி போன்ற முகமும் நீண்ட கோடுகளும், பொட்டுகளும் நாவல் பழ வடிவத்துடனும் கூடியது.

ப்ரத்யும்ன மூர்த்தம்: செம்பருத்தி பூ நிறத்துடன் வனமாலை அலங்காரத்துடன் வில், பாணம் முதலியவைகளுடன் கூடிய பெருமை வாய்ந்தது. இஷ்டா பூர்த்தி அளிக்கவல்லது.

ஸ்ரீபத்மநாப மூர்த்தம்: தேவர்களாலும், பூஜிக்கப்படுவது. நடுபாகத்தில் சக்கரத்தோடும் தாமரைப் பூவோடும் நாவல் பழ நிறமும், வடிவமும் உடையது.

ஸ்ரீஅனந்த மூர்த்தம்: புதிய அருகம்புல் நிறமான கருப்பு வர்ணமும் வனமாலையோடும் ஸ்ரீவத்ஸம், சங்கு, சக்ர, சார்ங்கம், கத்தி, கதை இவற்றுடன் ஸூக்ஷ்மமான சக்ரத்துடனும் தாமரைப் பூ கோடுகளுடனும் கூடி குளிந்திருக்கும்.

ஸ்ரீதர மூர்த்தம்: முன்சொன்ன சில லக்ஷணங்களுடன் ஸூக்ஷ்மமான சக்ரத்து டன் முகத்தில் பொட்டுகள், தங்கக் கோடுகள் இவை கூடி பசும்புல் போன்ற நிறத்து டன் வனமாலையுடன் ஸமமில்லாத சக்கரத்துடன் லக்ஷ்மீ கரமாக காணப்படும்.

ஸ்ரீலக்ஷ்மீ நாராயண மூர்த்தம்: கருநிறம், ஒரு முகம், 4 சக்ரம், உருண்டை வடிவம், வஜ்ரம், துவஜம், மாவட்டி, 3பொட்டுகள், கோடுகள், அதிக பருமனில்லாத மத்திய வடிவு உடையது.

ஸ்ரீநாராயண மூர்த்தம்: இரண்டு சக்கரங்களை உடையது. ஆதிசேஷ சர்ப்பத்தால் சுற்றிய வடிவு உடையது. நாரதருக்கு இஷ்ட பலத்தை அளித்த பெருமை வாய்ந்தது.

ஹ்ருஷீகேശ மூர்த்தம்: நீல ரத்தினத்திற்கு ஸமமானது. ஸம மில்லாத சக்கரத்துடன் சுத்த ஞானமருளும் மகிமை வாய்ந்தது.

ஸ்ரீதாமோதர மூர்த்தம்: நீல மேக காந்தியுடன் நடுவில் ஒரு கோடும் கழுத்தில் வனமாலையுடன் பிரகாசிப்பது.

ஸ்ரீஅநந்த மூர்த்தம்: அநேக நிறங்களுடன், ஸர்ப்பத்தால் சுற்றுதலுடன் விளங்கி இஷ்டத்தை பூர்த்தி செய்ய வல்லது.

ஸ்ரீஉபேந்த்ர மூர்த்தம்: நீண்டும் தலையில் சக்கரத்தோடும் வஜ்ரரேகையுடனும் வேறு இடத்தில் இரண்டு சக்கரங்களு டனும் வனமாலையுடன் கூடிய அழகுடையது.

ஸ்ரீஜனார்தன மூர்த்தம்: பருத்து கருமை நிறத்துடன் சங்கோடும் தாமரை பூ வரிசைகளோடும் 2 சக்கரங்களுடனும் கூடி மிகவும் குளிர்ந்து விளங்கி ஞானத்தை அளிக்க வல்லது.

ஸ்ரீவாஸுதேவ மூர்த்தம்: பஞ்சாயுதங்களுடன் கூடி சந்திரன் போன்று வெண்ணிறத்துடனும் நாபியில் சக்கரத்துடனும் மிக அழகாகத் தோற்றமளிக்கும்.

ஸ்ரீத்ரிவிக்ரம மூர்த்தம்: உருவில் நீண்டும் பஞ்சாயுத ரேகை களு டனும் வனமாலையுடனும் பிரகாசிக்கும்.

ஸ்ரீஅச்யுத மூர்த்தம்: வழவழப்பாகவும், கருமை நிறத்துட னும் பருத்தும் ஒளிவீசும் வனமாலையுடனும் கூடியது.

ஸ்ரீசிவதாப நாஶன மூர்த்தம்: சக்ரத்தின் 4 பக்கங்களிலும், நடுவிலும் பருத்து கோடுகளையுடையது, மனோபீஷ்டங்களை பூர்த்தி செய்யும் ஆற்றலுடையது. லகுவில் கிடைக்காதது. சிவனுக்கு ப்ரம்மஹத்திதோஷம் நீங்க அனுக்ரஹித்த மூர்த்தி.

ஹிரண்யகர்ப மூர்த்தம்: கருமை நிறத்துடன் துவாரமில் லாமல் குளிர்ச்சியுடன் தங்கத்தை தன்னுள்ளே வைத்துள்ளது.

மதுஸூதனமூர்த்தம்: 2 சக்ரங்களுடையது.

ஸுதர்ஶன மூர்த்தம்: உருண்டையாக, சக்ரத்துடன் கூடியது.

ஆதிஶேஷனாலும் சொல்லவொண்ணா மஹிமை வாய்ந்த இன்னம் அனேக மூர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை பெரியோர் அருளிய மஹாக்ரந்தங்களில் காணலாம்.